# ஆதி மார்க்க னீதி மொழி

**April 2024**

***இதழ் 33 – ஏப்ரல் மாதம் 2024 வெளியீடு***
***© AMNA Trust, Chennai***



### மூலமந்திரம்

முத்திபூர்ணம்!
மெய்யாக மெய்யாகவே சதுர்யுகங்ஙோடி கால மக்களிடத்திலும் உள்ள சர்வ மூலமந்திர னிரூபிக மகான்மியராகிய யுகவான் சாலை ஆண்டவர்களே முத்தி பாலிப்பு.

### பாத பூஜை

சுயம் பிரகாச னித்தியானந்த பிரம்ம சொரூபத்தினை அறியாது அஞ்ஞானமென்னும் திமிரத்தால் குருடாயிருந்த எங்களுடைய கண்களை ஞானமென்னும் அஞ்ஞன சலாகையால் திறந்த தேசிகேந்திரரே தேவரீருடைய திவ்ய திருவடிக் கமலங்ஙளுக்கே னமஸ்காரம்.

### மகாசங்ஙல்ப மந்திரம்

மறலி என்கிற எமனுடைய அவமான அவஸ்தை வந்து தீண்டும் அடையாளம், கசப்பு தீட்டு பிணனாற்ற ஜலம் வெளியாகி யுகங் ஙோடிகால னரக வேதனைக்குப் போகாமல் அதைமாற்றி, பரமபத னித்திய மகிழ்ச்சி வாழ்வு வரத்தில் ஏற்றவே சதுர்யுகத்திலும் உண்டான எல்லா ஜாதி மத வேதங்களும் வந்நிருக்க அந்த அகமிய மகா அதிவல்லப தெய்வீக பிரம்மவித்தைச் செயலானது மானெடுங்ஙாலங்ஙளாக மக்கள் புழக்கத்தில் இல்லாது இந்த உலகத்தை விட்டு மறந்து மறைந்நே போய்விட்ட இறுதிக்காலமாகிய இதுனேரம் எமபயத்தைக் கடத்தி மீண்டும் அதே பிரம்மவித்தைச் செயலாகிய சுவர்கப்பதி பரமபத முத்திச் செயலினில் ஏற்றி வைக்கும் கல்கி மகதி என்னும் மூக்குக்கு வெளியே மூச்சு ஓடாத தவமுடைய ஊண் உறக்கமற்ற எங்ஙள் குலதெய்வம் மெய்வழிச்சாலை ஆண்டவர்கள் மெய்மதத்தில் னாங்ஙள் சேர்ந்து ஆகிக்கொண்டிருக்கின்றோம்!

எதார்த்த னன்மனத்தினர் யாராக இருந்தாலும் இதில் சேர்ந்து தேவப்பிறப்பிலே பிறந்து ஆகிக்கொள்வதற்கு ஆண்டவர்களுடைய ஆசீர்பாதம்!



Copyright © AMNA Trust, Chennai

# குருபிரான் அவர்களின் முன்னுரை



ஆதி மார்க்க னீதி அவையின் அங்கங்களே எதார்த்த நன்மன சற்சன மக்களே, ஆதி மார்க்க னீதி மொழியின் மின்னணு சஞ்சிகையின் 33ஆம் இதழானது மார்ச் மாதத்தின் 17 அவை மற்றும் நான்கு இசை வகுப்பு நிகழ்வுகளுடன் உங்கள் கைகளில் தவழ்ந்து கொண்டிருக்கிறது.

மார்ச் மாத நிகழ்வுகளின் மிக முக்கியமான நிகழ்வாக, சர்வ சன்னத அலங்கிர்தர் சர்வேஸ்வரன் சாலை ஆண்டவர்கள் அன்னாட்டினிற்கே வித்தெடுக்க வந்த வித்துநாயகம் என அறிய வைத்த கண் திறந்து விட்டருளும் கனவயிர மலையாம் மெய்வழி குழந்தைசாமி கவுண்டர் ஐயா அவர்களின் 16ஆவது ஆண்டு பூர்த்திவிழா நாயகன் இல்லத்தில் மிக சிறப்பாக கொண்டாடப்பெற்றது.

மேலும் ஈதல் இசைபட வாழ்தல் அதுவல்லது ஊதியம் இல்லை உயிர்க்கு என்பதற்கேற்ப இசை, கதி, தாளம், நடை எனும் மூச்சை விடுவதும் எடுப்பதுமான ரகசியம் யாவும் வைத்து இசைப்பதே இசையின் சிறப்பு. இதனை உணராதவர்கள் உணர வேண்டி இசைவதும், அதனை உணர வைப்பதுவே இசையாகவும் உள்ளது. முழங்கும் எந்தன் முத்திப்பேருரை யாவும் இதனை உணர வைப்பதற்கே. இதனை உணர்ந்த மக்களே ஆதி மார்க்க னீதி அவையின் அங்கங்கள்.

இவ்விதழில் பொதிந்துள்ள, அட்ச ரேகை, கடக ரேகை, தீர்க்க ரேகை என்ற பூமியின் மேல் உள்ள கற்பனைக் கோடுகளின் உள்ளமை ரகசியம் மனிதனுக்குள் வைத்து பார்க்க வேண்டிய ஒன்றாகும். ஆகம விதிப்படி கட்டப்பெற்றுள்ள சிவாலயங்கள் யாவும் தீர்க்க ரேகையின் ஒரே நேர்கோட்டில் அமைந்துள்ள ரகசியம் மனிதனால் கணிக்க இயலாத அதி வியப்பிற்குரிய ஒன்றாகவும், ஆசான் மூலம் அகமுகத்தில் அறிய வேண்டிய ஒன்றாகவும் உள்ளது. அறிவு சார்ந்த மக்கள் இதனை கூர்ந்து கவனித்து பெரும் பலனை அடைய வேண்டும் என்ற ஒரே நோக்கத்துடன், எங்கு சென்றாலும் அறிய முடியாத இத் தேவரகசிய செயல்கள் யாவும் பொதிந்து உதித்து வருவதே ஆதி மார்க்க னீதி மொழி மின்னணு சஞ்சிகை. மக்கள் பயனும் பலனும் பெற்று, அறிவுடனும் ஒழுக்கமுடனும், பொய்யை விட்டு மெய் சார்ந்த வாழ்க்கை வாழ்வதற்கான அடிநாதமாக விளங்கும் இச் சஞ்சிகையைப் பார்த்து படிக்கும் மக்கள் யாவரும் இதன் பெரும் பலனைப் பெற்று வாழ்வாங்கு வாழ்வு வாழ பரிசுத்த ஆவித் தெய்வத்தின் திருவடி போற்றி வாழ்த்துகிறேன். நமஸ்காரம்.

*சாலை ரவி*

**நிறுவனர், ஆதி மார்க்க னீதி அவை**



Copyright © AMNA Trust, Chennai

*உன் மனம், ஒன்றைப் பார்த்த பின் தான் அந்த ரூபத்தை னினைக்கும். அதேபோல இறைவனை, அந்நக் கோடி சூர்யப் பிரகாசத் திரு வல்லபப் பிரபுவை ஒரு தடவையாவது சந்நித்திருந்நால் தான் உன் மனம் அந்நத் திருச்சன்னிதிக்குப் போகும்.*

*உன் மனைவியை னினைத்தால் உன் எண்ணம் வீட்டிற்குப் போகும். ஆனால் உனக்கு கல்யாணம் ஆவதற்கு முன் "மனைவி" என்றதும் உன் எண்ணம் வீட்டிற்குப் போகுமா? போகாது. இது, இகத்தில் எப்படியோ அதேபோல்தான் பரத்திலும்.*

*கல்வியில் மெய்க்கல்வி, பொய்க்கல்வி என்று இரண்டு வகை இருக்கிறது. பொய்க்கல்வியின் செயல், அழிந்நுபோகிற பொய்ப்பொருள் பொய் மதிப்புக் கொடுத்து, இறுதியில் னீங்நாக் கஷ்டத்தில் கொண்டு போய் மாட்டிவிடும். னல்ல குதிரையின்மேல் ஏறிச் சென்றால் னினைத்த ஊர்போய்ச் சேரலாம். ஆனால் ஒரு சண்டிக் குதிரையை னம்பி ஏறிச்சென்றால், பல்லுப் பகடு போகின்ற ஆபத்துத்தான் வரும். ஆகவே மனிதனாகப் பிறந்த ஒவ்வொருவருடைய கடமை, துவக்கம் முடிவு இல்லாததும், எக் காலத்தும் அழியாததுமான பிரம்மரந்நிர அதிமகோன்னத பீடத்தை அடைவிக்கின்ற மெய்க்கல்வியை அது இருக்கும் எல்லை னாடி அடைவதே.*

*~ சாலை ஆண்டவர்கள்*



Copyright © AMNA Trust, Chennai

# ஆதி மார்க்க னீதி அவையின் 2024 மார்ச் மாத அவை நிகழ்வுகள் – 2024 ஏப்ரல் மாத வெளியீடு

## 02-03-2024 ~ சனிக்கிழமை அவை~ நாயகன் இல்லம்
## தொகுப்பு: ஸ்ரீமதி. ஜீவிதா வடிவேலன்

பிரம்மப் பிரகாச சாலை ஆண்டவர்கள் அருளிய **தன்னேழின் னபுசின் புற மேவுற வீரபுரப் புரமாய்…** என்ற பூரணப் புதையல் பாடலுடன் அவை இனிதே மலர்ந்தது.

*ஜீவசகோதரர் சங்கர்:* **புலனைந்தும் வென்றார் தம் வீரமாம் வீரம்** என்ற திருவாக்கின் படி, வஞ்சு புலன்களின் சதியால் பிறவி சுழலில் சிக்கியிருக்கும் நாம், யதார்த்த பரமாத்ம சொரூபராக வரும் குருபெருமானின் கையகத்தில் ஆகி, புலன்களின் தலைவனான மனதை அறிவாக மாற்றி, புலன்களை வெல்லும் உபாயத்தை அறிவதன் மூலமே பிறவாமை எனும் பெரும்பதம் பெற முடியும்.

**கோடாயிதக்கூர் - வாக்கியம் எண் 165 :** ஞான சூரியனாக வரும் ஆசானின் திருவாக்காகிய தீயின் மூலமே, நம் பழைய மூட நினைவுகள் யாவும் எரிக்கப்படுகிறது. அவர்களின் அன்பு என்னும் விசேஷமே நம்முடைய சர்வ வினைகளையும் தீர்த்து, கயிலாயத்தில் குடியேற்றி வைக்கும் வாகனமாக இருக்கிறது.

*ஜீவசகோதரர் விஜயகுமார்:* **பரிசுத்த வேதாகமம் - மார்க் : அதிகாரம் - 13 : திருவசனம் - 27:31** தனக்கென ஒரு சுற்றத்துடன் பரம்பொருள் இவ்வுலகில் மனித உரு தாங்கி அவதரித்து வருகிறது என வேதத்தில் அருளிய படி, வானமும் பூமியும் ஒழிந்தாலும், புராதனராகிய பெரியோர்களின் வார்த்தைகளும், அதனை கேட்டு தன்னுள் செயலாக்கி கொண்டவர்களும் என்றும் ஒழிந்து போவதில்லை. யாரும் கட்ட முடியாத திருமாளிகையாகிய இத்தேகத்தில் ஜீவ நரம்பிற்கு சமீபமாக இருக்கின்ற நான் எனும் இறை பொருளை உணர வைக்கும் குருபிரானின் மெய்யான அன்பை பெற்றவர்களே சிவபதத்தை அடைகிறார்கள்.

**குரு முறாதி:**

குருபெருமானிடத்தில் வேண்டுகோள் தியானம் வைப்பதற்கான அரும் பெரும் நிலைகளை உள்ளடக்கிய பொக்கிஷமே குரு முறாதி. சாலை ஆண்டவர்கள், திருவெனும் இமையா நாட்டில் வீற்றிருக்கும் தீன் திரு மேனியராகிய குரு பெருமானின் **முன் உரைத்த முதல் னூலாம் மெய்வழி னூலும், மறுனூலாம் பூரணப் புதையலும், ஈராறு னூலாகிய கலையின் இரகசியமும், கருனெல்லி போல் உயிரின் நிலையும் விளங்கும் விண்ணான அமுத கலை விருட்சம் வித்தின் சூட்சுமங்கள் அனைத்தும் இரத்தினச் சுருக்கமாக அருளியுள்ள கண்ணான னூலாகும் குரு முறாதி.** இதனை கனகமணி காமீலாய் வரும் குருவின் அருளே நமக்கு காப்பாக மாற்றுகிறது. இருளில் வழி தெரியாமல் தெளியாத மனதுடன், காம முகமெனும் உலக இச்சை மாறாத இளம் பருவத்தில் கலக்கத்துடன் பரிதவித்து கொண்டிருந்த நம்மை எடுத்தணைத்து, அருளமுது ஊட்டி அன்பு எனும் வலைக்குள் புகுத்தி, அழியாத தௌஹீதை நித்தம் அளித்துக் கொண்டிருக்கும் குருபெருமானின் ஆசீர்பாதத்தை அனைவரும் பெற்று அழியா பெருவாழ்வு வாழ வேண்டும் என்ற வேண்டுதலுடனும் ஸ்தோத்திரப் பாடலுடனும் அவை இனிதே நிறைவுற்றது.

*உலகமரியாதை, மானம், முகஸ்துதி முதலியவற்றின் பொருட்டுத் தண்ட காஷாயங்களைத் தரித்தவன் சன்னியாசி யெனத் தகான். ஞான தற்பரனே சன்னியாசியாவார்.*

***~ குரு கீதை***



Copyright © AMNA Trust, Chennai 

## 03-03-2024 ~ ஞாயிற்றுக்கிழமை ~ நாயகன் இல்லம்~ சிறப்பு அவை
## மெய்வழி குழந்தைசாமி கவுண்டர் ஐயா அவர்களின் 16ஆம் ஆண்டு பூர்த்தி
## தொகுப்பு: ஸ்ரீமதி. விஜயசித்ரா

சாலை ஆண்டவர்கள் அருளிய **அரியானை அறியவைத்து அந்நணனா யெனைப்பிரட்டிப் பிறப்பித்து...** என்ற ஸ்தோத்திரப் பாடலுடன் அவை நிகழ்வுகள் உதயமாகின.

**குருபிரான் அருளமுதம்:**

விசுவாமித்திரர் அருளிய காயத்ரி மந்திரத்தின் சிறப்பை உணர்த்துவதே சாலை ஆண்டவர்கள் அருளிய **முரீதுச் சுருக்கம்.** ஜாதி பாகுபாடு அற்றதே அனைவருள்ளும் பொதிந்துள்ள மந்திர மௌன வித்து. பசியிலும் ருசியிலும் பேதமற்ற மனிதனுக்கு ஜாதி, மதத்தில் வந்த பேதம் போக்க, வள்ளலார் கொண்டு வந்ததே சமரச சுத்த சன்மார்க்கம். அவதார யுக புருஷராம் மெய்வழி ஆண்டவர்களின் திருவடி நிழல் படிந்து மெய்வழி குழந்தைசாமி கவுண்டர் ஐயா, தான் பெற்ற ஞானநிலை யாவற்றையும், என்னையும் ஒரு பொருட்டாய் எண்ணி, இணங்குதற்கு உளவு சொல்லி, தன் கொண்டல் வாய்மை கொண்டு விதைத்த வித்தில்லா வித்தே என்னை பரிசுத்த ஆவித் தெய்வத்தின் திருநாமத்தை ஓங்கி உரத்த குரலில் அறிக்கை செய்யவும், பாடவும், பேசவும் வைத்துள்ளது.



*மெய்வழி குழந்தைசாமி கவுண்டர் ஐயா*

ஆசானிடம் சரணடைந்து, அவர் ஆலவாய் திறந்து காட்டும் அதிசயத்தை நாம் அறிவதற்கு ஆகும் காலமே ஆண்டுகள் பன்னிரண்டு. சனி கிரகத்தின் அகமிய ரகசியம் அறிந்து அதன் பிடியிலிருந்து விடுபடுவதற்கான ரகசியங்களை நகல் வடிவாக உள்ளடக்கிய தலமே திருநள்ளாறு. இங்குள்ள ஈஸ்வரன்-தர்பாரண்யேசுவரர், தாயார்-பிராணாம்பிகை என்ற போகமார்த்த பூண் முலையாள். மூன்று ஸ்தனங் கொண்ட இந்த தாயும், மதுரை மீனாட்சியும், ஆண்டாள் நாச்சியாரும் தன் மணாளனைக் கண்டதும் மறைந்த அவர்களின் மூன்றாவது ஸ்தனத்தின் அகமிய ரகசியத்தை தேவ ரகசியம் தேர்ந்த நன்னெறியோரே அறிவர்.

தன்னால் அறிய இயலாத, சர்வ வேதங்களும் உணர்த்தும் அவரவரின் நாமத்திற்குரிய பொருளாகிய இறைவனை, தன்னை அறிந்தவர்களின் தயவு கொண்டே அறிய முடியும். நெடுந்துயராம் பிறவிப்பிணி தீர்க்க மிடிமை இடரை வெல்வது ஒன்றே வழி. இவ்வுடம்பு எடுத்தல் எதற்கென எண்ணி, யாரும் கட்ட முடியாத திரு மாளிகையான நமது உடம்பினுள், சுருதி முடிவான பொருளாகிய திருவடியை அறிந்து வாழ்வதே வாழ்வு. பதஞ்சலி முனிவரின் யோக சூத்திரமும், நாவரையரின் தேவாரமும், நாளை வரும் நாளாம் நமன் வரும் நாளுக்கு முன்பே, ஒரு பொருளாம் மெய்ப்பொருளை அருளும் குருவருளால் அறிந்து உய்ய வேண்டும். தோட்டக்காரனைப் பார்த்த பூக்கள், **மலர்ந்த யாவற்றையும் பறித்துக் கொண்டான் நாளை நம்முடைய நாள்** எனப் பேசுவதாகக் கபீர்தாஸரும் கூறுகிறார்.

*ஜீவசகோதரர் வடிவேலன்:* வேளாண்மைத் துறையில் கொள்முதல் செய்யும் விதை முதல் போல், வேல் ஆண்மையரால் அன்னாட்டினுக்கே வித்தாக எடுக்கப் பெற்றவர்களே நாம். அறிவு வடிவாகி அழியாப்பதியில் குடியேறிய மெய்வழி குழந்தைசாமி கவுண்டர் ஐயா இன்று நம் குருகொண்டலின் நாத வடிவாகி நம்மை வழி நடத்துவது சத்தியமே. ஒளி தேகத்தில் உறைந்திருக்கும் அவர்களின் அடக்க ஸ்தலத்தில் அறிவைப் பெற்ற மக்கள் அனுபவித்த மனமடங்கும் அகமியச் செயலின் ரகசியத்தையே சர்வ வேதங்களும் சாட்சி கூறுகின்றன. சகல கல்வியையும் உள்ளடக்கிய மெய்க்கல்வியை பழக்கித் தரும் ஞானபண்டிதரின் மலர்மிசை ஏகி மாணடி சேர்வதே பிறவாமை பெறுவதற்கான வழி என்ற பகிர்வுடனும் பரிசுத்த ஆவித் தெய்வத்தின் ஸ்தோத்திரப் பாடலுடனும் அவை நிறைவுற்றது.



Copyright © AMNA Trust, Chennai 

## 07-03-2024 ~ வியாழக்கிழமை அவை~ நாயகன் இல்லம்
## தொகுப்பு: ஸ்ரீ. தியாகராஜன்

சாலை ஆண்டவர்கள் அருளிய **என்னமோ வென்று வும்மை எண்ணிவிட் டிருந்நே னின்னாள்...** எனும் ஸ்தோத்திரப் பாடலுடன் அவை இனிதே மலர்ந்தது.

**குருபிரான் அருளமுதம்:** சிவனுடன் இருப்பது சிவராத்திரி. தெய்வீகமும் தெய்வமும் தனக்குத் தெரியும் என்பதே உலகத்தில் உள்ள உச்சகட்ட அறியாமை. மெய்யும் பொய்யும் பிரித்துக் காட்டி அழியாததை அருள்வதே வேதம். குருவருளால் தன் ஜீவனைக் கண்டு ஜென்ம சாபல்யம் பெற்ற ஜாதி மனுக்குலத்திற்கு என்னாளும் சிவராத்திரியே.

**கோடாயிதக்கூர் வாக்கியம் எண் – 23: திருனாள் :** தன்னையறிந்த பெரியோர்களின் தயவால் வேத மாமறைகளின் ரகசியங்கள் அனைத்தும் விடிகின்ற ஓர் இரவே லயிலத்துல் கதிர், வைகுண்ட ஏகாதசி, எட்டாம் நாள் ரா, சிவன் ராத்திரி என்பதாகும். வேதம் என்பது பழகுவதாகவும், ஞானம் என்பது வாழ்வதாகவும் உள்ளது. வேத வேதாந்தங்கள் யாவும் மனுக்குலம் நித்திய சொர்க்கபதி வாழ்வு வாழ்வதற்கென ஞானிகள் அருளியுள்ளார்கள்.

*ஜீவசகோதரர் ரியாஸ்:* **திருக்குரான் - அத்தியாயம் அல்பகரா :** நித்திய ஜீவனே அல்லாவாக, ஆவியாக, பிரம்மமாக உள்ளது. தவ்ராத், இஞ்சில், சபூர், புர்கான் எனும் இஸ்லாத்தின் நான்கு வேதங்களும் அறியாமை அகற்றி அறிவை புகட்ட வந்ததேயாகும். கோடி சூர்யப்பிரகாச அருட்பெருஞ்ஜோதியாகத் திகழ்வது யுக யுகந்தோறும் உலகில் அவதரிக்கும் அவதார புருஷர்களே. பரிசுத்த ஆவியாக விளங்கும் தூய ஆன்மாவை, குருவின் தயவால் வேத சாட்சியாக நிரூபணை செய்கின்ற இடமாக விளங்குவதே **ஆதி மார்க்க னீதி அவை.**

**குருபிரான் அருளமுதம் - குரு முறாதி :** கண்ணான னூலாகும் குருமுறாதி என ஆண்டவர்கள் அருளியுள்ளார்கள். அணுவுக்கு அணுவாக அண்ட பிரம்மாண்டமாக ஒவ்வொரு மனுத் தலையுள் இருக்கும் அதிசயப்பொருளே திருவெனும் இமையா னாடு. நற்றாளாகிய திருவடியை திருமேனியாக தாங்கி வருபவர்களே மறைக்கிழ வள்ளல். மனுத் தலையின் அகத்திலுள்ள அழியாத மெய் குறித்து அருள்வதே வேத வேதாந்தங்கள். மனிதனுக்கு இறைவன் வழங்கிய தனி சீதனமாகிய அமானிதத்தை அறிய வைக்கும் அருட்குருவே அண்ணலாக அறிவு வடிவாக வரும் மெய்ஆசான் என குருபிரான் அருளியதும் பரிசுத்த ஆவித் தெய்வத்தின் ஸ்தோத்திரப் பாடலுடன் அவை இனிதே நிறைவுற்றது.

## 09-03-2024 ~ சனிக்கிழமை அவை~ நாயகன் இல்லம்
## தொகுப்பு: ஸ்ரீமதி. கல்பனா விஜயகுமார்

பரிசுத்த ஆவி தெய்வத்தின் பொற்பாதம் பணிந்து **விடிந்நன சாலை னாட்டில் விளங்ஙின பீடபூமி...** எனும் ஸ்தோத்திரப் பாடலுடன் அவை மலர்ந்தது .

**குருபிரான் அருளமுதம்:**

குருவின் பேரருளே நம் அறியாமை அகற்றி அறிவுத் தெளிவில் ஆக்கி ஜீவன் கண்ட ஜென்ம சாபல்ய மேங்குல மக்களாக்குகிறது. தொண்டர்கள் பூவில் ஞானசூரியன் உதயம் கண்டு, தன்னுலகம் விடிந்த நாளே னல்ல னாட் பிறப்பாக, சிவன் ரா, வைகுண்டேகா தேசி ரா, லயிலத்துல் கதிர் ரா, எட்டா னாள் ரா, எனும் னல்ல னாட் பிறப்பாகும். அவரவரிடத்தும் கோள்களின்றி கிரகம் அஸ்தமித்த கிரகஸ்தன் என்ற கதி திருவீடே **அறஞ் ஞெய் வீடாம் ஜீவனாக** உள்ளது. மும்மூலம் ரகசியம் உணர்ந்தோரே சாயுச்ய பதம் பெற்றவர்கள்.



Copyright © AMNA Trust, Chennai 

**கோடாயிதக்கூர் திருவாக்கியம் - 166 :** மனித தேகத்தில் உள்ள ஆறு ஆதாரமும், அறுசுவைக் கலப்பும், ஆறு கால பூஜையும், ஓயாத் தொழுகையும் ஒரு தேவகுருவின் தயவால்தான் அறியமுடியும். சுவாசம் மூக்களவே ஓடுவது மோனம், ஓடாமல் இருப்பது தவம் எனும் தவநிலைகளின் ரகசியம் குருமுகமாக அறிந்த குருகுலத்தோரே அறிவர்.

*ஜீவசகோதரர் குமார்:* **சத்திய வேதம் – யோவான் - 1:23, 5:39, 8:51 :** *கர்த்தருக்கு வழியைச் செவ்வை பண்ணுங்கள் என ஏசாயா தீர்க்கதரிசி சொன்னபடியே, நான் வனாந்தரத்திலே கூப்பிடுகிறவனின் சத்தமாயிருக்கிறேன். நித்திய ஜீவன் உண்டென என்னைக் குறித்துச் சாட்சி கொடுப்பதும் அவைகளே. என் வார்த்தையைக் கைக்கொள்பவன் என்றென்றும் மரணத்தைக் காண்பதில்லை என மெய்யாக மெய்யாகவே உங்களுக்கு சொல்லுகிறேன்.*

கர்த்தராகிய குருவின் செம்மொழியே நம் அலைவுறும் மனதை செம்மை சீர்முகப்பின் வழி சேர்த்து உத்தியோவனக் காட்டில் குடியேற்றுகிறது. நானே வழியும் சத்தியமும் ஜீவனுமாயிருக்கிறேன் என ஜீவன் குறித்து சாட்சி கூறும் வந்த வேதமாகிய ஆசானின் வாய்மையைக் கைக்கொண்டால், மரணத்தின் வழி செல்லும் மனதின் பிடியிலிருந்து மீட்படைந்து அறிவின் வழி சென்று பரலோக ராஜ்ஜியத்தில் குடியேறி மரணமிலாப் பெருவாழ்வு வாழலாம்.

*ஜீவசகோதரி பானுமதி :* **திருக்குரான் - அத்தியாயம் - 14: இப்ராஹீம் (நபி):** இப்ராஹீம் நபி அல்லாஹ்வின் கட்டளைப்படி தன்மகனைப் பலியிட முனைந்ததும், சைவ சமயத்தில் திருத்தொண்ட நாயனார் இறை கட்டளைக்குத் தன் பிள்ளையைப் பலியிட்டு உணவளித்ததும், உணர்த்தும் பொருள் - நம் அறியாமையைப் பலியிட்டால் இறையருளால் மறுபிறப்பான அறிவுப்பிறப்புப் பெற்று, பேரின்ப வாழ்வு வாழலாம் என்பதாகும். மக்காவில் காபாவை வலம் வந்து ஹஜ் யாத்திரை நிறைவேற்றும் செயல் - தேசிகர் வாசகமான தீர்த்தத்தில் நீராடி, மனம் அலையாது பாதுகாத்து, எல்லை திசையற்ற ஏக இறைவனைத் தன்னுள் அறிந்து தொழும் அறச்செயலாகும்.

**குருபிரான் அருளமுதம் - குரு முறாதி:**



சதுர்யுகத்திலும் வந்த லட்சத்து இருபத்தி நான்காயிரம் நபிமார்களின் காலம், இடம், நாகரீகம், மொழி, இனம் ஆகியவை வேறாயினும், அவர்கள் கொண்டு வந்த மாறாத ஒரே மெய்ச்செயல் **மறலி கை தீண்டாமையே**. எதற்கும் முதற்பொருளான ஜீவனின் இருப்பிடமாகிய மக்காம் எனும் இறை இல்லத்தில் குடியேறி வாழ்வதே சாவருமுன் சாகப்பழகும் சன்மார்க்க செயலாகும். குருபிரானின் பொற்கிண்ண மதுபானமே பாற்கடலைக் காய்ச்சி வடித்தெளித்திட்ட வேதாந்தமாக, மதியமுத கலைக்ஞான போதமாக, விண்ணான அமுதகலை விருட்ச வித்தாக விளங்கி, கலிமாப் பொருளை அவரவர் கைக்கனியாக்குகிறது.

அவரவருள் விளங்கும் அடி-முடி-நடு-விந்து-நாத ரகசியமே, புறத்தில் பூமியின் மேலுள்ள கற்பனைக் கோடுகளான கடக, அட்ச, மகர ரேகைகள். இந்தியாவில் ஈர்ப்பு விசையுள்ள கடகரேகையில் அமைந்த உஜ்ஜயினி நகரில் காலத்தின் ரகசியம் அறிந்த ஞானிகள் அமைத்ததே கால ரகசியம் பொதிந்த காலேஷ்வரர் கோவில். ஞானிகள், தான் கண்ட அகமிய ரகசியத்தை மக்கள் உணர்ந்து உய்வதற்கென உண்டாக்கியதே ஆகம விதிப்படி உள்ள அத்தனை கோவில்களும், என குருபிரான் அருளியதும், உலகெலாம் உணர்ந்து ஓதற்கு அரியவனை அறியும் அறிவைத் தந்த பரிசுத்த ஆவித் தெய்வத்தின் திருவடி போற்றி ஸ்தோத்திரப் பாடலுடன் அவை நிறைவுற்றது.



Copyright © AMNA Trust, Chennai April 2024

## 10-03-2024 ~ ஞாயிற்றுக்கிழமை ~ சத்துவாச்சாரி அவை
## தொகுப்பு: ஸ்ரீமதி. கவிதா வெங்கட்

சாலை ஆண்டவர்கள் அருளிய **அரியானை அறிய வைத்து...** என்ற ஸ்தோத்திரப் பாடலுடன் அவை மலர்ந்நது.

**குருபிரான் அருளமுதம்:**

சீலம் எனும் மஹா பரிசுத்தம், அசுத்தம் நிறைந்த மனித உடலில்தான் உள்ளது. அது ஐயறிவையும் ஆளும் திறன் கொண்ட ஆறாவது அறிவாக மனுத்தலையுள் விளங்கும் இருதயமாக உள்ளது. 63 நாயன்மார்களுள் ஒருவரான பூசலார் உருவாக்கிய இருதயாலீஸ்வரர் ஆலயமே இதற்கு சாட்சி. கூர்ந்த ஒன்றினிலே வைத்து கோடியாய் பிரித்த நீதி எனும் பொருளாகிய ஜீவனையே பண்டை நான் மறைகளும் சாற்றுகின்றன. உத்தி ஓ வண்ணமாக விளங்கும் அகரமாகிய இதனை குருவருளால் உணர்வு-உகார ரகிதமாக ஆனவர்களே ஓத முடியும்.

*ஜீவசகோதரர் கௌதம்:* ஐந்தறிவு இன்னதென அறிவிக்கும் ஆறாவது அறிவை அறிவிக்கும் அறிவு வடிவே ஆசான். அவரவரின் நாமத்திற்கான பொருளை உணர்த்தும் ஆசானின் வாய்மையே வேதம். பெரியோர்கள் அருளிய வேதம் யாவும் அவர்களின் அனுபவச் செயலே. அதனை நம்மிடம் செயலாக்கும் வல்லபம் கொண்ட பெரியோர்களின் ஓசை கொண்ட நடனமே அருட்பெருஞ்ஜோதி.

*ஜீவசகோதரர் விஜயகுமார்:* தன்னிடம் உள்ள மந்திரப் பொருளை தரிசிப்பவனே தேவன். நுதற்கண் எனும் மூன்றாவது கண் ஈந்து அதன் மூலம் நம்மை காணச் செய்பவரே குரு. அவரின் வாய்மையே நித்தியமான பஞ்சாட்சரம்.

*ஜீவசகோதரர் சங்கர்:* செல்வத்துள் தலையான ஒன்றின் மூலமே இறைவனின் கஜானாவில் இருந்து எடுத்து அருளும் குருவின் அருளமுதத்தை அருந்த முடியும். தேவாதி தேவர்களின் தலைவன், தன் அருள் உலவும் நடன காலமே வசந்த காலம் என்பது சாலை ஆண்டவர்களின் திருவாக்கு. மெய்யை மெய்யாகப் பெறுவதற்கான மெய்யான வழியாக இன்று ஆதி மார்க்க நீதி அவை திகழ்வதின் சாட்சி அதன் அங்கங்களே, என்ற பகிர்வுடனும் ஸ்தோத்திரப் பாடலுடனும் அவை இனிதே நிறைவுற்றது.

## 10-03-2024 ~ ஞாயிற்றுக்கிழமை ~ சிவகாசி அவை
## தொகுப்பு: ஸ்ரீ. ஜெய்குமார்

சாலை ஆண்டவர்கள் அருளிய **அழியாப் பதி குடியேறிய னாயகம் என் குருவின்...** என்ற **ஞான முறையீடு** ஸ்தோத்திரப் பாடலுடன் அவை இனிதே உதயமானது.

*ஜீவசகோதரி பத்மா:* ஐம்புல நுகர்வையும் அனுபவிக்கும் ஆக்கமும் அழிவும் அற்ற ஒரு பொருளே ஆறாவது அறிவாக விளங்கும் அமானிதம் எனும் அழியாப் பதியாகிய ஜீவன் இருக்கும் தலம். அதனை அறிவிக்கும் அகரம் அறிந்த நந்தியாகிய குருபிரான் தங்கள் வாய் திறந்து ஆலங்காட்டி நம் சொந்த வீடாகிய உலகில் நம்மை குடியேற்றி வைக்கும் செயலையே,

**அத்திபு ரந்நனி லேவா ழும்சுத்த**
**வித்தக வாலையின் புத்திரன் றன்**
**சுத்தத்தி ருவடிப் பற்றித்தொ ழுதிடச்**
**சொந்நவீ டுகாணும் வாருங்ஙடி** என சாலை ஆண்டவர்கள் அருளியுள்ளார்கள்.



Copyright © AMNA Trust, Chennai

*ஜீவசகோதரர் கோபிநாத்:* நம்பிக்கை சார்ந்ததே புறவுலக வாழ்வு யாவும். அகவுலக வாழ்வு என்பது மெய்ஆசான் தயவால் அறிந்து பழக வேண்டிய வைராக்கியம் சார்ந்த ஒன்று என்பதனை சாலை ஆண்டவர்கள், **வட்டமிட்ட மாய்கையெனு முள்ளுக் காட்டை வைராக்யச் செருப்பிட்டு மிதித்து ஏறி** என அருளியுள்ளார்கள். **பரம வைராக்கியம் புருஷ தரிசனம்** என்கிறது பகவத்கீதை. நான்கு நிலைகளாக வள்ளல்பெருமான் அருளியுள்ள உயிரினும் மேலான ஒழுக்கம், நம்பிக்கை, வைராக்கியம் இவற்றின் அடிநாதமாகவும் முக்குணங்கள் கடந்த ஒன்றாக இருப்பதையும் ஆசானின் தயவு கொண்டே அறிய முடியும்.

*ஜீவசகோதரர் மாதவன்:* மெய் ஆசானின் அன்பு ஒன்றே நம்மை சிவமாக்கும். நம் மனதின் மூட நினைவுகள் நீங்கவும் ஆசான் அருளும் வழியில் நின்று சாதிக்கவும் நம்பிக்கை, வைராக்கியம் மிக அவசியம்.

*ஜீவசகோதரர் பழனிவேல் :* எண்ணம் பல கோடியதாய் விரிந்து அழிவை நோக்கிச் செல்லும் நம் மனதை ஓரறிவாக னித்தியத்தில் ஆக்கும் பிரம்மநிஷ்டரின் செயலே பிரம்மவித்தை. அடங்காது அலையும் மனதின் தாகத்தை ஜீவத்தண்ணீர் கொண்டு தணிப்பவரே தனிகையர். **தோன்றின் புகழொடு தோன்றுக** என்பது நம் புகழுடம்பை அறிந்திட ஆசானின் திருமுகத்தில் பிறக்கும் மறுபிறப்பே ஆகும். ஜலமாகிய மனதில் அக்கினியான ஜீவன் முழுகும் முன்பே குருவின் பரிசுத்த ஆவியால் ஜலத்தை ஆவியாக்கி புகழுடம்பில் குடியேறி வாழ்வதே வாழ்வு.

*ஜீவசகோதரர் கிருஷ்ணமூர்த்தி:* தன்னை அறிந்தவர்களின் தயவே தமிழாகிய பஞ்சாட்சரத்தை அறிவதற்கு துணை. எண்சாண் உடலுக்கு பிரதானமான கழுத்துக்கு மேலிருக்கும் சிரசே அறிவிருக்கும் தலமாகிய இருதயத்தின் இருப்பிடம். இதனை அவரவர் இடத்தில் செயலாக்கி வைப்பவரே இறை குரு.

*ஜீவசகோதரர் சரவணன்:* விதியாகிய துக்கத்தை நிவர்த்தி செய்பவர் இறைவன் என எண்ணும் அறியாமை அகற்றி, விதியை மதியால் வெல்லலாம் என செயலாக்கி வைப்பது ஆசானின் அருளே.

*ஜீவசகோதரர் ஜித்தின்:* கங்கையில் நீராடி விலகாத பாவத்தை, ஜீவகங்கையில் நீராடி விலகச் செய்யும் அகமிய ரகசியத்தை அறிவிப்பவரே ஆசான்.

*ஜீவசகோதரர் மகாலிங்கம்:* தானாகப் படித்து விளங்க இயலாத வேதத்தை விளங்க வைப்பது தன்னை அறிந்தவர்களின் இரக்கம் ஒன்றே. மனவழி சென்று வீணாகும் நம் வாழ்நாளைக் காத்து அருளும் மெய்க் குருபிரானின் வாய்மையே பிறவானிலை அருளி பேரின்பம் அனுபவிக்கச் செய்கிறது, என்ற பகிர்வுடனும் ஸ்தோத்திரப் பாடலுடனும் அவை இனிதே நிறைவுற்றது.

## 14-03-2024 ~ வியாழக்கிழமை அவை~ நாயகன் இல்லம்
## தொகுப்பு: ஶ்ரீ. விஜயகுமார்

**குருபிரான் அருளமுதம்:**

மெய்வழியின் 124ஆம் தலையுக ஆண்டு உதயமாகும் இன்னாளே ஜீவனைக் கண்டு ஜென்ம சாபல்யம் பெற சாலை ஆண்டவர்கள் உண்டாக்கிய தலைநாள். ஊரான ஊர் உயிர் பயிறேற்றும் ஊராக, சாலை ஆண்டவர்கள் உண்டாக்கிய தன்னை அறிதல் எனும் ஜீவ ஏற்ற செயலுடன் விளங்கி வந்த மெய்வழிச்சாலை எனும் குருஷேத்திர எல்லை, மாயா சரீரமாகிய தூலமின்றி எவரும் எக்காலத்தும் எவரையும் ஜீவ ஏற்றத்தில் ஆக்கியதே இல்லை என ஆண்டவர்கள் அருளியபடி இன்று குருஷேத்திரமாக இருந்த எல்லையாக விளங்குகிறது. ஆண்டவர்கள் எடுத்து வைத்த வணக்க முறைகள் யாவும் ஆசான் அருளால் அறிய வேண்டிய அகமிய செயல்களே ஆகும். எதார்த்த குணம் கொண்டோரே ஏகாட்சர நாயகனையும் ஏகாட்சரத்தையும் அறிவர். நாட்கள் வரும் நாளெலாம் நலநாளாக்கும் செயல் கொண்டதே **ஆதி மார்க்க னீதி அவை** என அறிவை அறிந்தோர் அறிவர். தீர்க்கமான தொலை நோக்குப் பார்வை



Copyright © AMNA Trust, Chennai 

கொண்டு வருங்கால சந்ததியருக்கு என பெரியோர்கள் அருளியதே வேத வேதாந்தங்கள் யாவும். பாட்டன் தனிகையர் தேடிவந்து பாத்திரமாயுள்ள கோத்திரர்களான பேரர் எனும் குபேரர்களுக்கு தந்த பொற் தெய்வமே பிரம்மப் பிரகாச மெய்வழி சாலை ஆண்டவர்கள். கடின முயற்சி, வைராக்கியம், ஒழுக்கம் கொண்டே ஆண்டவர்கள் கொண்டு வந்த மெய் எனும் பொருப்பினை உணர முடியும்.

**திரு மெய்ஞ்ஞான கொரல்: திருவாக்கியம் எண் 3ன் தொடர்ச்சி :** சாயுச்ய அரசனென வருவாய் என் போல் என ஆண்டவர்கள் அருளிய திருமொழிகளே, நகலில் உழலும் நம்மை அசலை அறியச் செய்யும் வழிகாட்டியாக உள்ளது. நாம் வாழும் காலத்திலேயே சொர்க்க நரகத்தில் புகுவதற்கான அடையாளத்தை தூல தேகத்தில் காணலாம் என வேத வேதாந்தங்கள் சாட்சி பகர்வதை ஆசானின் அன்புக்கு பாத்திரமானவரே அறிவர்.

ஜாதிகளை இறைவன் படைக்கவில்லை. தீதிலாத வாய்மை சொல்பவரே பறையர் என்பதும், சக்கு எனும் குற்றம் அற்றவரே சக்கிலியர் என்பதுமே நிஜம். அறியாமையை அறியும் போதே நகலையும் அசலையும் பிரித்தறிய முடியும். அழியும் பொருளைப் பார்க்கும் அழிவற்ற பார்ப்பானாகிய நான்முகனைக் கண்டவனே பிராமணன். வர்ணாசிரம நிலைகளின் அகமிய ரகசியம் அறிந்த மக்களே ஆதி மார்க்க னீதி அவையின் அங்கங்கள்.

ஆர்டிக், கடகரேகை, பூமத்திய ரேகை, மகரரேகை, அண்டார்டிக் எனும் பூமியின் மேலுள்ள 5 கற்பனைக் கோடுகளின் அகமிய ரகசியங்களே அடி-முடி-நடுவின் ரகசியமாகும், அதன் நகல் வடிவமாக கோவில்களும் உள்ளன. மக்கள் இறைவனின் பிரபஞ்ச ஆற்றலை உணரவே ஈர்ப்பு விசை அதிகமுள்ள கடக ரேகை செல்லும் வழியில் பெரியோர்களால் கோவில்கள் அமைக்கப்பெற்றுள்ளது எனும் பகிர்தலுடனும் ஆண்டவர்கள் அருளிய ஸ்தோத்திரப் பாடலுடனும் அவை இனிதே நிறைவுற்றது.

## 16-03-2024 ~ சனிக்கிழமை அவை~ நாயகன் இல்லம்
## தொகுப்பு: ஸ்ரீமதி. ஜீவிதா வடிவேலன்

பிரம்மப் பிரகாச சாலை ஆண்டவர்கள் அருளிய **ஜகத சற்குணா லங்கிர்த சன்னதர் ...** என்ற ஆதி மான்மியம் பாடலுடன் அவை இனிதே மலர்ந்தது.

சிவானுபவம் பெற்று முக்குணம் விட்டு நிர்க்குணம் ஆனவர்களே ஜகத சற்குணா அலங்கிர்தர். அவரே யுகங்கள் நான்கும் கைகொண்டு அகத்தையும், புறத்தையும் கண்டு ஆளக்கூடிய கோடூழியர். அப்படியான பிரம்ம பீடமாம் மகதி ஆண்டவர்கள் வீற்றிருக்கும் இடமே சல ஆசனமாகும்.

**கோடாயிதக்கூர் - வாக்கியம் எண் 167 & 168 :** நினைவின் வல்லபம் குறைந்த தன் தலையில் ஞானம் ஏறாது என்ற அவல நிலையை ஞானிகளுக்கு அறிவிக்கும் சடங்கே சஷ்டியப்த பூர்த்தி எனும் அறுபதாம் கல்யாணம். சாவுடைய கல்யாணமாகிய இதனை மாற்றும் தவ சிரேஷ்டர்களின் தவ வல்லபம் 60 வயது கடந்தவரையும் மெய்நிலையில் ஏற்றி, சாவு கல்யாணத்தை சாகாத பெருவாழ்விற்குரிய நிகழ்வாக மாற்றக் கூடியதாகும். ஒரு மெய்க் குருவின் கையகத்திலாகி, ஆறாவது அறிவு பெற்ற பிறகும், புலன் வழி சென்று அறிவை சிதறச் செய்பவனின் ஆயுள் குறையும் என்பது ஆண்டவர்கள் திருவாக்கு.

*ஜீவசகோதரர் விஜயகுமார்:* **பரிசுத்த வேதாகமம் - ஜான் : அதிகாரம் : 7 - 51: 59** சத்திய வேதம் உணர்த்தும் அத்தனையும் அகமிய ரகசியமே. மெய்ஆசானின் தயவால் அறிவு வடிவானவர்களே, அறிதற்கு அரிதாகிய ஆதி மூலப்பழம் பண்ணார மணி உண்டை பெட்டகத்தின் பிரம்ம இரகசியத்தை அறிந்து, பிறவாமை எனும் மரணமிலா பெருவாழ்வு பெறுகிறார்கள் என்பதையே சத்திய வேதம் கூறுகிறது.



Copyright © AMNA Trust, Chennai April 2024

*ஜீவசகோதரர் வடிவேலன்:* 23° சாய்ந்தவாறு சுழன்று கொண்டிருக்கும் இப்பூமியின் மேலுள்ள கற்பனை கோடுகளே பூமத்திய ரேகை, கடக ரேகை, மகர ரேகை. இதன் இரகசியத்தை, ஔவையார் வினாயகர் அகவலில், **பேழை வயிறும் பெரும்பாரக் கோடும்** என்றும், **சர்வத்திற்கும் காரண ரூபமாகவும், சர்வ சத்துக்களுக்கும் பெட்டகமாகவும், தொந்திக் கணபதியாகவும், மணிவயிறாகவும், பஞ்சுபூத கணத் தலையரசன் திருத்தலமாகவும் மிளிர்ந்து கொண்டிருக்கிறது** என சாலை ஆண்டவர்களும் அருளியுள்ளார்கள். புவியீர்ப்பு விசை, காலம் இவற்றின் உண்மை உணர்த்தும் ரகசியமே இந்த மூன்று கோடுகளும். அவரவரிடத்தும் அடி-முடி-நடுவாக, முச்சுடரின் ரகசியமாக இலங்கும் காலச்சக்கரத்தின் இரகசியமே மத்திய பிரதேசத்தின் உஜ்ஜைனி மகா காலேஸ்வரர் கோவில் உணர்த்துவது. குருவருளால் காலச் சக்கரத்தின் ரகசியம் உணர்ந்த மக்களே ஆதி மார்க்க னீதி அவையின் அங்கங்கள் என்ற பகிர்வுடனும் ஸ்தோத்திரப் பாடலுடனும் அவை இனிதே நிறைவுற்றது.

## 17-03-2024 ~ ஞாயிற்றுக்கிழமை ~ சத்துவாச்சாரி அவை
## தொகுப்பு: ஸ்ரீமதி. சண்முகப்ரியா செந்தில்

**குருபிரான் அருளமுதம்:**

அகமியத்தில் ஏழு கடலின் ரகசியத்தை ஆசான் அருளால் அறிந்தவனுக்கு அது அமிர்த கடலாகவும் அறியாதவனுக்கு உப்புக் கடலாகவும் உள்ளது. ஆழியின் ரகசியமே திருவாரூர் ஆழித்தேர். உப்பாகிய விஷத்தை அமுதமாக்கும் வித்தையே பிரம்மவித்தை. ஜோதி மலையான ஆசானே, மக்களின் பிறவிப்பிணி தீர்க்கும் நாதம் விளைந்த நாதனாகிய மாமலை. இம் மெய்ஞான அவைக்குள் இன்று வந்து சேர்ந்தவரும் முன்னவரே. வெளிச்சத்தின் மூலம் இருள் விலகி திசைகள் உண்டாவது போல் ஆசானின் ஜோதி ஒளியே நம் அறியாமை எனும் இருளை விலக்கி, அறிவிருக்கும் திசை காட்டுகிறது. திடம் பட மெய்ஞானம் சேர்வதற்கு உடல் ஆரோக்கியம் மிக அவசியம். ஆசான் அருளால் மேட்டிமை அகன்று அறிவின் வழி செல்லும் போதே ஜீவன் கண்டு ஜென்ம சாபல்யம் பெற முடியும். மந்திர கட்டுகளால் கட்டப் பெற்று எமனை சிவனாக மாற்றும் அத்தனை நிலைகளையும் உள்ளடக்கியதே **ஆதி மெய் உதய பூரண வேதாந்தம்.** பெரியோர்கள் தாங்கள் பழகி வந்த மெய்ஞான நிலைகளை உள்ளபடியே மக்களுக்கு அருள்கிறார்கள். நாம் நமது சிற்றறிவு கொண்டு அவர்களின் பேரறிவை கணிக்க இயலாது.

*ஜீவசகோதரர் கௌதம்:* பஞ்சாட்சரமாக ஒட்டி ஒட்டாது நம் உடலில் இருக்கும் பிரம்ம சொரூபத்தை பெரியவர்கள் அறிவிக்கும் போதே நாம் அறிகிறோம். ஆசான் அருளால் நாம் மனிதனாகி, நம் அகக்கண் திறப்பிக்க பெறும் போதே அறியாமை அகன்று பிரம்மமாகிய ஆசானை அறிய முடியும்.

*ஜீவசகோதரர் சங்கர்:* அறிவுத் தெளிவுடன் வாழ்வதற்கான நிலைகளை அருள்பவரே ஆசான். ஆறறிவு கொண்ட மானிட ஜென்மம், ஐயறிவு கொண்டே புறவுலக வாழ்வை வாழ்கிறது. ஆசான் துணை கொண்டே தன்னையறியும் ஆறாவது அறிவை ஒருவன் அறிய முடியும். தரிசனை என்பது பெரியோர்கள் தங்களின் திருவெனும் இமையா நாட்டம் கொண்டு நம் வினை தீர்ப்பதேயாகும். ஐம்புலன் வழியாக நஷ்டமடையும் ஜீவனை ஆசான் துணை கொண்டு அழியாமல் பாதுகாக்கும் செயலே லாபம் உள்ள ஐந்தொகை கணக்கு. பரிசுத்த ஆவியின் ஆசீர்பாதமே மெய்யான மெய்வழி காட்டும் **ஆதி மார்க்க னீதி அவை**யின் அங்கமாக நம்மை ஆக்கியுள்ளது, என்ற பகிர்வுடனும் ஸ்தோத்திரப் பாடலுடனும் அவை இனிதே நிறைவுற்றது.

*குரவன் பாதசேவையினால் மகாவாக்கியத்தை அறிகின்றவ ரெவரோ அவர்களே சன்னியாசிகளெனப் பெறுவார்கள். மற்றையோர் வேஷதாரிகளாவர்.*

***~ குரு கீதை***



Copyright © AMNA Trust, Chennai

## 17-03-2024 ~ ஞாயிற்றுக்கிழமை ~ சிவகாசி அவை
## தொகுப்பு: ஸ்ரீமதி. பானுமதி குமரேசன்

சாலை ஆண்டவர்கள் அருளிய **செல்வச் சீர் னபியை அந்தர்மா முகமாய்...** என்ற ஸ்தோத்திரப் பாடலுடன் அவை மலர்ந்தது.

*ஜீவசகோதரி செல்வி:* கனவு என்பது காலசச்சக்கரம் காட்டும் மனதின் நிலையாகும். பற்றற்றான் பற்றைப் பற்றிட மெய்க் குருவினிடம் நாம் பழகும் மெய்க்கல்வி அன்றி மற்ற யாவும் அவித்தையே. அறியாத உலகினர் கூறும் உடலின் ஆறு சக்கரமும் அது கடந்த ஏழாவது சக்கரத்தின் உண்மை நிலையும் அறிய வைப்பது குருவின் அருளே. மனிதனுக்கு வயது தந்ததின் பிரயோஜனம் மெய்ப்பால் அறியவே. போன வயதை மீட்டுத் தரும் வள்ளலாகிய குருவின் தயவு ஒவ்வொரு மனுத்தலைக்கும் அவசியம்.

*ஜீவசகோதரர் தாமோதரன்:* எதார்த்த குணமே ஞானிகளின் அன்பினைப் பெறுவதற்கான தகுதி. நன்மை தரும் நட்பே நல்வழி காட்டும் துணை. குருவை தேடாத தோசித்தனமே மிடிமை. நிர்க்குண நிலையில் நம்மை ஆக்கி, வாழும் போதே கயிலாயம் குடிபுக அருள் புரியும் குருவின் வாய்மையே உபதேசம். அவரவர் நாமத்திற்கான பொருளை அறியச் செய்யும் ஆசானின் வாய்மையை செயலாக்குவதே சீடனின் தகுதி. நீதி வழியில் நம்மை நடத்தும் குருவருளால் காற்றை பிடிக்கும் கணக்கறிந்து, செல்லும் நாள் செல்லாமல் காப்பவனே சித்தனாகும் தகுதிக்கு உரியவன்.

*பவித்ரா ஜெய்குமார்:* **அ - உ - ம்** சேர்ந்த ஓம் என்பதே முத்தொழில் கொண்ட முதலும் முடிவுமற்ற உலகமாக, பிரணவமாக, விந்து நாதமாக, வேத முடியாக உள்ளது. உலகைப் படைத்த பிரணவ நாதமே அகத்தீயாக சூக்குமமாக உள்ளது. பிணி-மூப்பு-சாக்காடு அணுகா தேகம் அருளி, நால்வகை யோனி எழுவகை தோற்றமும் தன்னிடத்தில் அறிய வைப்பவரே ஆசான். அகர-உகர-மகரமான அடி-முடி-நடுவை அறிய வைத்து ஜீவனை ரட்சிக்கும் மாறாத கடல் ஓசை போன்ற குருவின் னாதம் உணர்த்துவது சர்வ மூலமந்திரங்களும் குறிக்கும் ஒரே மெய்ப்பொருள் ஆகும்.

*ஜீவசகோதரி சுதாமணி:* பிரதி மாதமும் வடலூர் செல்வதும் ஏழைகளின் பசி தீர்ப்பதும் ஜீவகாருண்யம் என எண்ணும் அறியாமை, ஒரு மெய்குருவின் அருள் மூலமே விலகும். மாயக்கூத்தின் வகை அறியாமல் நரனாக இருக்கும் ஒருவனை மனுவாக்கும் குருவின் நாதமே அவரின் அடையாளம்.

*ஜீவசகோதரி உஷா நாகலிங்கம்:* இல்லாப் பொருளுக்கு ஏங்கி எத்தனை காலம் மணி உருட்டி நாம ஜெபம் செய்தாலும் அத்தனையும் வீண் என்பதும், அசலை அறிவிக்கும் கோவில்கள் நகல் என்பதையும் ஒரு மெய் குருபிரானை சந்தித்து மெய்யறிவை பெறும் போதே விளங்கும்.

*ஜீவசகோதரி சரஸ்பதி சேகர்:* தன்னறிவில் சாய்ந்து புறத்தில் பௌர்ணமி நிலவு கண்டபின் விரதம் முடிப்பது, விளக்கு ஏற்றி ஜோதி தரிசனம் என எண்ணுவது, வாசியோகம் செய்வது, ஜீவசமாதிகளுக்கு செல்வது, அத்தனையும் வீண் என்பதும் அறியாமை என்பதும் அறிவை அறிந்த ஆசான் முன்னிலையில் செல்லும் போதே அறிய முடியும். எத்தனை போலி குருமார்களை சந்தித்து எத்தனை தீட்சை பெற்றாலும் விளங்க இயலாத மெய்ப்பொருளை வேதசாட்சியுடன் விளங்க வைக்கும் குருவின் அருளே அருட்பெருஞ்ஜோதி.

**குருபிரான் அருளமுதம்:** பாலின் பரிசுத்தம் மெய் வழியாகவும் சபையாகவும் நினைவாகவும் உள்ளது. சபைக்கரசர் என்பதன் பொருள் அவரவர் நினைவாக உள்ளது. சந்திரனாகிய அறிவு என்பதன் நாமமே சுதாமணி. ஆசானின் செயல் யாவரிடத்தும் உள்ள மெய்ப் பொருளை அறிய வைப்பதே. நான் உன்னை விட்டு விலகுவதில்லை ஆதலால் என்னை நீ அறிவது கடமையாக உள்ளது. ஜீவனை அறிய வைக்கும் குருவின் இரக்கமே காருண்யம். அதனை ஒருவன் பெறுவதே புண்ணியம். நாம ஜெபமும் மணி உருட்டுவதும் வாயில் சொல்வதன்றி அகமிய செயலாக இருப்பதை ஆதி மார்க்க னீதி அவையின் அங்கங்களே அறிவர் என குருபிரான் அருளியதும் ஸ்தோத்திரப் பாடலுடன் அவை நிறைவுற்றது.



Copyright © AMNA Trust, Chennai

## 21-03-2024 ~ வியாழக்கிழமை அவை~ நாயகன் இல்லம்
## தொகுப்பு: ஸ்ரீமதி. புன்னகை மகேஷ்குமார்

மாணிக்க வாசக சுவாமிகள் அருளிய **செத்திடமும் பிறந்திடமும் இனிச்சாகா திருந்திடமும்...** எனும் திருஞானத் தாழிசை பாடலுடன் அவை மலர்ந்தது.

**குருபிரான் அருளமுதம்:**
பாரவான்கள் முப்பொருள் தத்தம் செய்து பெற்ற அகர முதலின் மேன்மையை உணர்ந்த மக்களே ஆதி மார்க்க னீதி அவையின் அங்கங்கள். வேத சாட்சியாக ஆசான் அருளும் ஆன்மப் பிரகாசமாக மிளிரும் ஜீவனே அருட்பெருஞ்ஜோதி. குருவில்லா வித்தை பாழ் என சாலை ஆண்டவர்கள் அருளியபடி அறிவு இன்னதென அறிவிக்கும் ஆசான் அருளால் காலத்தின் ரகசியம் அறிந்து சமரச சுத்த சன்மார்க்கத்தில் வாழ்வதே பெருவாழ்வு.



**கோடாயிதக்கூர் வாக்கியம் எண் -139 :** சிவப்பிரகாசமான ஆதி அசல் புள்ளியாகிய அச்சமில்லா நாட்டில் குடியேறி வாழும் வாழ்வே எமனணுகா வாழ்வு.

*ஜீவசகோதரர் ரியாஸ்* – **அல்குரான்:** மனிதன் ஒழுக்க நெறியில் வாழ வகை செய்வதே அல்குரானின் அடிப்படை இலக்கு. அறிவாகிய அமானிதத்தை நபுசாக்கும் நம் மனதின் பிழை பொறுத்து பெரியோர்கள் தங்கள் தயவால் அதனை சீராக்குகிறார்கள். மனம், அறிவு, இருதயம், ஆன்மா இவற்றின் நிலைகளை சூபி ஞானிகள் அரபு மொழியில் பல நாமங்களில் அருளியுள்ளார்கள். நபுசு, சிபத்து, திக்கீர் இவற்றின் நிலை யாவும் சாலை ஆண்டவர்களால் **தௌஹீது மக்காம்** பாடலில் அருளப்பெற்றுள்ளது. **ஹம்மாறா** எனும் நபுசாகிய சைத்தானுடன் நடக்கும் போராட்டமே **ஜிகாத்** என்பது நபிகள் நாயகத்தின் திருவாக்கு. மகான்களின் வழிகாட்டுதலே அறிவை அறிந்து மனதை வெல்வதற்கான வழியாகும்.

**குருபிரான் அருளமுதம்:** ஆர்வ சித்தமுடன் மெய்யை தேடி வரும் மக்களுக்கு, கோடி மனுக்கீந்தாலும் குறையாத மெய்மையை வழங்குவது **ஆதி மார்க்க னீதி அவை**யின் கடமையாக உள்ளது என குருபிரான் அருளியதும், ஸ்தோத்திரப் பாடலுடன் அவை நிறைவுற்றது.

## 23-03-2024 ~ சனிக்கிழமை அவை~ நாயகன் இல்லம்
## தொகுப்பு: ஸ்ரீமதி. கல்பனா விஜயகுமார்

ஆறிரு சமயத்திற்கும் அறிவுரை தெய்வமான பரிசுத்த ஆவி தெய்வத்தின் திருவடி போற்றி **தத்துவம் கடந்த தயாநிதிக் கடலே...** எனும் ஸ்தோத்திரப் பாடலுடன் அவை மலர்ந்தது.

**குருபிரான் அருளமுதம்:** தத்துவத்தில் சிறந்த மனித உருவே எமபயத்தை கடந்து வாழும் ஆற்றல் கொண்டது. ஒரு திரு தரிசனையால் **திரு** விழாமல் காக்கும் நாளே திருநாள். **தற்கலை பீர்முகமது ஒலியுல்லா** அவர்கள் அருளியுள்ளபடி, ஆசானின் திருக்கரத்தில் உள்ள மதியான திங்கள், நாதம் விளைந்த சங்கு, செம்மலரான செங்கோல் கொண்டு, தேனும் மாவோடு பாலும் நீரமுதாக உண்டு களித்த **வா** மூலம், நடமிடும் பாதத்தால் செவிடால் மிதித்த **வா** மூலம் மெய்ப்பொருளான பூரணத்தைக் கைக்கொண்ட நாளே அவரவர்க்கும் பிறவானாள் பிறப்புத் திருனாள்.



Copyright © AMNA Trust, Chennai

**கோடாயிதக்கூர் திருவாக்கியம் – 169 :** ஆசானே அருட்கதியென சரணடைந்த மக்களுக்கு பூமியடங்கலான மனம் அடங்கும் செயலையும், அவரவர் உள்ளத்தில் பதிக்கும் செயலையும், ஆசானிடம் வஞ்சகமற்ற எதார்த்த ஒட்டுதலுடன் இருந்து பெறும் மனதற்ற பரிசுத்தத்தையும், தன்னையறியும் ஒழுக்க நெறியையும், அறிந்து மெய்யுணர்ந்த மக்களாவதற்கான பத்தியத்தை உணர்த்தும் திருவாக்காகும் .

**குருமுறாதி: *வேண்டுகோள் தியானமான விண் அப்பமே குரு முறாதி.*** மெய்க்குருபிரான் தன் கருணையால் நம் அறிவுக்கண் திறப்பித்து தலைவிதி எழுத்தை மதி எழுத்தாக்கும் செயல் கொண்ட கண்ணான நூலே குருமுறாதி. முக்கோணமெனும் கொழுமுனையில் ஊன்றி, அந்தர்முகமாக அகநோக்கு விரியப்பெற்று னற்றாள், சாகாத்தலை, வேகாக்கால், வேர் மேலும் தலைகீழான கற்பகத்தருவின் சிறப்பும், ஆசான் அருளும் மெய்த் தொழுகையில் ஒண்டி ஒருமனம் ஆகும் போதே அறிய முடியும்.

ஆதி திருக்கூத்து எழுந்த **அவ்** இடமே தன்மயமாய் னின்றிலங்நும் தஜல்லியமான ஒளிமார்பு. கூரான குருவருளைப் போற்றி ஜலமாகிய மனம் சுண்டி தவம் எழும் உளவறிந்து அகர முதலும் அவ்வு முதலும் வாங்கும் அருகதை உள்ளவனே இன்சான். சர்வ கால காலங்ஙளையும் சர்வ காலத்திற்குள் அடங்ஙிய அழியாத னித்திய னிஜனிதி லாபகர வசந்தத்தை வசந்த **வா** மூலம் பெற்று, மும்மலத்தை முச்சுடராக மாற்றி அழிவிலா பூரணத்தை தன் வசமாக ஆக்கிக் கொண்ட மக்கட்கே வசந்த காலம் வாய்க்கிறது என குருபிரான் அருளியதும் ஸ்தோத்திரப் பாடலுடன் அவை நிறைவுற்றது.

## 24-03-2024 ~ ஞாயிற்றுக்கிழமை ~ சிவகாசி அவை
## தொகுப்பு: ஸ்ரீமதி. அருணா சுதர்சன்

பரிசுத்த ஆவித் தெய்வம் பிரம்மப் பிரகாச மெய்வழி சாலை ஆண்டவர்களின் பொற்பாதங்களை வணங்கி குரு ஸ்தோத்திர பாடலுடன் அவை மலர்ந்தது.

*ஜீவசகோதரர் மகேஷ்:* குருவருளால் மனிதன் ஒருவனே மாயக்கூத்தின் வகையறிய முடியும். அனித்திய உடல் கொண்டே நித்திய மெய்யை அறிந்து நித்திய சுக வாழ்வில் குடியேறி வாழ முடியும். குருவின் இரக்கத்தால் ஞானக்கண் திறக்கப்பெற்றவரே ஜீவனின் ரகசியம் அறிந்து தூங்காமல் தூங்கி ஆதி புள்ளியில் மனம் அடங்கி சுகம் பெறமுடியும் என முன்வந்த செம்மல்கள் யாவரும் அருளியுள்ளனர்.

*ஜீவசகோதரி புன்னகை:* பிரம்மவித்தை மூலம் அவரவரின் நாமத்துக்குரிய பொருளை அறியச்செய்து, செத்திடமும் பிறந்திடமும் இனி சாகாத இடமும் அறிவித்து, அறியாமை அகற்றி அறிவிற்கு உருவம் தருவதற்கென மாயா சரீரமுடன் வரும் பேரறிவே குருபிரான். நவ உப்புகளால் ஆன மானிட தேகத்திலுள்ள அழியாத வைர மணி தேகத்தில் குடியேற்றி பிறவிப் பிணி தீர்க்கும் அருமருந்தே குருபிரானின் நாத மருந்து. அதுவே நவமணிப் பதியாக கல்லையும் கனகமாக்கும் ரசவாதமாக உள்ளது.

*ஜீவசகோதரி வைஷ்ணவி:* எண் வகை மங்களப் பொருட்களில் ஒன்றானது கொடி - நம் பாவம் தீர்க்க கூவி அழைக்கும் குக்குடத்தின் குரலாக உள்ளது. அதுவே கிரகங்களின் பிடியிலிருந்து நம்மை விலக்கி பிறவி பெருங்கடல் கடத்தி கரை சேர்க்கும் கலங்கரை விளக்காக உள்ளது.

*ஜீவசகோதரர் ஜெகநாதன்:* பரம்பொருளான குருவின் அருளமுதமே நம் வின்னங்கள் தீர்க்கும் அன்னமான செவிச் செல்வம். கேட்டதும் கேளாததும் தந்து மோட்ச சாம்ராஜ்ய வீட்டில் நம்மை குடியேற்றி வைக்கும் கற்பக விருட்சமே தாயாக தந்தையாக குருவாக விளங்கும் நம் குலதெய்வம்.

*ஜீவசகோதரர் கணேஷ்கிருஷ்ணன்:* அழியாத திருச்சிற்றம்பல பொருளாகிய மெய்யே, பஞ்சபூத கணங்களின் பதியாக விளங்கும் கணபதி. கால்வழி பிறந்த யாவரும் குருவருளால் மறுபிறப்பு பெற்று பரலோக ராஜ்ஜியத்தில் குடியேற வேண்டும்.



Copyright © AMNA Trust, Chennai April 2024

*ஜீவசகோதரர் பாஸ்கர்:* அகத்தூய்மை ஆக்கும் ஆசானின் வாய்மையே ஆலவாயான் திருநீறாகும். நரனை தோற்றத்தில் ஆக்கி தெய்வ நிலைக்கு உயர்த்துபவரே குருபிரான். ஐந்தொழில் அரசாக வந்து அமானித சீர் காட்டி மாயத்திரை அகற்றி அகரம்-உகரம் அறிய வைத்து, அறிவுத்தெளிவில் நம்மை ஆக்கி வைக்கும் ஆசானே அருட்பெருஞ்ஜோதி ஆண்டவர்.

**குருபிரான் அருளமுதம்:** மெய்யுணர்வில் கலந்து ஆகும் செயலே அனுபவம். னிபுனமணி விளக்காக வரும் ஆசானின் திருப்பாதமே நம் பொய்வழி நீக்கி, மெய்வழியில் ஆக்கி கைலாயம் சேர்க்கிறது. அவரவரின் ஜீவனாகிய சிவமயப் பொருளை அறியவைக்கும் நாதம் விளைந்த நாதனின் நாவிற்கு பெரிதாக உலகம் இல்லை என குருபிரான் அருளியதும் ஸ்தோத்திரப் பாடலுடன் அவை நிறைவுற்றது.

*குருவின் கிருபையால் தனது ஆத்மாவிடத்து ஆத்மகாமனாகிய தன் பதியைத் தரிசித்தலால் ஜீவசமத்துவ முக்திமார்க்கம் கைவரப்பெற்று ஆத்ம ஞானம் பிரவிருத்திக்கின்றது.*

***~ குரு கீதை***

## 28-03-2024 ~ வியாழக்கிழமை அவை~ நாயகன் இல்லம்
## தொகுப்பு: ஸ்ரீ. விஜயகுமார்

பிரம்மப் பிரகாச மெய்வழி சாலை ஆண்டவர்கள் அருளிய **வந்ந வேதம் வரைந்ந பயத்தினால்...** எனும் ஞான அகவல் பாடலுடன் அவை உதயமானது.

**குருபிரான் அருளமுதம்:**

**திருமெய்ஞ்ஞானக் கொரல் - வாக்கியம் எண் 3ன் தொடர்ச்சி:** சர்வ மத மூல மந்திரங்களும் ஜீவனாகிய அறிவிருக்கும் தலத்தைக் குறித்தே அருளப்பெற்றுள்ளது. மெய்வழி ஆண்டவர்கள் தனது குருபிரானின் இரக்கத்தால், தான் பாடுபட்டு பெற்ற 76 ஆண்டு கால வைவஸ்ய தவமுதலானது பழகி வந்ததன்றி, படித்து வந்ததல்ல என அருளியுள்ளார்கள். புழங்காத பேச்சுலகில் புகலுகிறேன் கேட்க மதி அதிகம் வேண்டும் என ஆண்டவர்கள் அருளியுள்ளபடி, அப்படியான பேச்சுடன் ஞானசபை மலர்ந்து ஓங்கும் இடமாக பரிசுத்த ஆவித் தெய்வத்தின் பரிபூரண ஆசீர்பாதத்துடன் **ஆதி மார்க்க னீதி அவை** தழைத்தோங்கி வளர்ந்து வருகின்றது.

*ஜீவசகோதரர் மணிவண்ணன்:* ஈ.வெ.ரா பெரியார், சுயமாக சிந்திக்கச் சொன்னபடி சுயம்பிரகாச நித்தியானந்த பிரம்ம சொரூபத்தினை அறியவே நாம் வந்துள்ளோம்.
**செயற்கரிய செய்வார் பெரியர் சிறியர்**
**செயற்கரிய செய்கலா தார்** என்ற திருக்கொரலின் படி அழிவிலிருந்து நம்மை மீட்கும் செயற்கரிய செயல் செய்வோரே ஆன்றோர், சான்றோர், தீர்க்கதரிசி, குருபிரான், பாரவான், ஞானி என்போர். **அரியவற்றுள் எல்லாம் அரிதே பெரியாரைப் பேணி தமராக் கொளல்** என்பதே பலன் தரும் செயலாகும். நீதி வழுவாத நன்னெறியில் நின்று, மனிதனுக்கு வயது தந்ததின் பிரயோஜனமாகிய மெய்ப்பால் அருளி, பிறவிப்பிணி மாற்றி இவ்வுலகை ரட்சிக்க வருவோரே பெரியோர். சிறப்பெனும் செம்பொருளை வழங்கி தமிழ் அகத்தை அருளும் தந்தையென விளங்கும் குருகொண்டலே குலதெய்வம்.

*ஜீவசகோதரர் ரியாஸ்:* **சூபி வழியில் ஞான ஒழுக்கம்:** அல்லாஹ்வுக்கும் அவர் தூதருக்கும் அடிபணிந்து பயபக்தி கொள்வோரே வெற்றி பெறுவர். ஞானத்தின் அடி நாதமாகிய அகமிய ஒழுக்கத்தின் அடையாளமே புற ஒழுக்கம். மெய் குருபிரானுக்கு கௌரவம் அளிப்பதும் அவர் அருளிய ரகசியங்களை பேணிக் காப்பதும் முரீதானவனின் தலையாய கடமை. இதில் தவறியவனின் ஈமான் எனும் இறை நம்பிக்கை பறிக்கப்படுகிறது. இழி குணம் விட்டு நற்குண வழியில் நடப்பவனே அல்லாஹ்வை தேடியடைவான். உடல் பொருள் ஆவியை குருவினிடம்



Copyright © AMNA Trust, Chennai 

அர்ப்பணம் செய்பவனே இரு உலக நன்மையும் பெறுவான். குருவருளால் திருவாகிய கோடி சூரியப் பிரகாச இறை பொருளை தரிசிக்கும் போதே நம் இருவினை தீரும். நிலையான தீனின் கயிறான மெய்க்குருவைப் பற்றியவர் நேர்வழி பெற்று அல்லாஹ்வின் திருச்சன்னிதியில் சேர்வது திண்ணம்.

*ஜீவசகோதரர் சசிகுமார்:* **ஆதி மார்க்க னீதி அவை**யில் சேர்ந்து என்னுள்,

**னாறுமோர் மாமிசத் துண்டாய்எ னக்குள்ளி**
**ருந்நஇ ருதயத்தைக்**
**கூறவொண் ணாச்சம்பத் தெல்லாம்வி ளைஉத்தி**
**யோவன மாக்கிவைத்தாய்**
**பாரிலுள் ளோர்கூறும் இதயத்தை என்குரு**
**பாரென்று சொன்னவுடன்**
**பார்க்கப்பார்க் கஆயி ரத்தெட்டண் டமெலாம்**
**பகல்போலி லங்குக்கண்டேன்** **(ஆதிமெய் உதய பூரண வேதாந்நம்)**

ஆண்டவர்கள் அருளியுள்ள மெய் வணக்கமும், தன்னையறியும் தவமுறையும், அரை நொடிக்குள் மலமகற்றும் தீட்சையும், அறிவுத் தெளிவும் ஆசான் தயவால்தான் பெற முடியும்.

**குருபிரான் அருளமுதம்:** சுமார் 1350 வருடங்களுக்கு முன்னமே நாம் எவ்வாறு ஒழுக்கத்துடன் இருக்க வேண்டும் என திருக்குரானில் அருளப்பெற்றுள்ளது.

**மேகலை யேகலை மாகலை யேவில**
**காதக லாபுகுகுன்**
**னீகலை யாமுன் னான்ஙது னான்ஙாய்**
**முடியுமெ லாமலிபாய்**
**மேகலை யேமே லேறுவ தும்ஒன்**
**பதுனெற் பிரமாணம்**
**சோஹம் உளவா னுலவுவர் தூலம்**
**சொல்லும் மண்ணூழி.** **(பூரணப் புதையல்)**

பரிசுத்த ஆவித் தெய்வத்தின் நோக்கம் அறிந்து, நாம் ஒவ்வொரு செயலிலும் ஈடுபட வேண்டும். **என்னகமுன் றிருப்பாத மிலங்ஙும் பொதி மலையி லிருத்தியெனைத் திருத்தித்தவ னிறுத்திய** திருச்செயல் மெய்வழி ஆண்டவர்களின் தயவாகும் என அருளி ஸ்தோத்திரப் பாடலுடன் அவை இனிதே நிறைவுற்றது.

## 30-03-2024 ~ சனிக்கிழமை அவை~ நாயகன் இல்லம்
## தொகுப்பு: ஸ்ரீமதி. சண்முகப்ரியா செந்தில்

சாலை ஆண்டவர்கள் அருளிய **ஒதுமறை வேதனெறி உண்மையாய் ஒழுகிவளர்...** என்ற ஸ்தோத்திரப் பாடலுடன் அவை மலர்ந்தது.

**குருபிரான் அருளமுதம்:**

மறை எனும் வேத வேதாந்தங்கள் யாவும், வந்த வேதமாகிய நாதம் விளைந்த நாதன் அருளும் நெறிப்படி ஓதக்கூடிய ஒன்று. நரனாக இருக்கும் ஒருவன் குருவருளால் ஆறாவது அறிவை அறிந்த பின்பே மனிதனாகிறான். முப்பொருள் கோல விளக்கமாகிய வேதமுடியை குருபிரான் தன் திருவாய் நிதியாக நம் உள்ளத்தில் பூட்டுகிறார்கள்.



Copyright © AMNA Trust, Chennai 

**கோடயிதக்கூர் திருவாக்கியம் எண்-170:** தோற்றமில்லாத மனதை கொண்டு அறியாமையில் சொல்கின்ற வார்த்தையே மனசாட்சியாக சொல்கிறேன் என்பது. வஞ்சப்புலன் மூலம் அழிவை நோக்கி நம்மை இழுத்துச் செல்லும் அது பிசாசு சாட்சியாக உள்ளது என்பது ஆண்டவர்கள் திருவாக்கு.

**சத்தியவேதம்: யோவான் அதிகாரம் 14: வாக்கியம் எண் - 3,16,17,18,20,26 :** ஆணவமற்ற இடமாகிய அறிவிருக்கும் தலத்தை அறிந்தவர்கள் சொல்லும் மொழியே குருமொழி. கர்த்தரின் தயவால் அறியக்கூடிய கங்குல் பகலற்ற இடமே அகமிய உலகு. வையகம் காக்க வரும் கர்த்தர் அவரவரிடத்தும் துப்புரவாக துலக்கும் ஆசனாக உள்ளார். மனிதனை பிரகாசிக்க செய்கின்ற மெய்யான ஒளி நானே என சத்திய வேதத்தில் உள்ளபடி, திசை காட்டும் ஞான சூரியனே மெய்யான ஒளியாகும். தன்னுயிர் வீணாகாமல் காக்கும் ஜீவகாருண்யம் குருவருளால் ஏழாம் பிறப்புடலம் எடுக்கும் போதே அறிய முடியும்.

*ஜீவசகோதரி பானுமதி:* **திருக்குரான் - அத்தியாயம் 15 - அல் ஹிஜ்ர்:** மண்ணால் படைத்த மனிதன், நெருப்பால் படைத்த ஜின்கள் மற்றும் நபிகள் நாயகத்திற்கு இறைவன் தந்த கட்டளைகள் பற்றிய அத்தியாயம். குருவருளால் ஆறாவது அறிவை அறிந்தவனே உள்ளம் ஆகிய பெருங்கோவிலில் இருக்கும் ஜீவனாகிய சிவனை அறிந்து பேரின்பத்தை அடைகிறான். குருவின் தயவே, பத்தாவது வாசலாகிய பரமபத வாசலை தன்னில் அறிவதற்கான வழி. சிவனாக வரும் குருவை அறியாமல் அவரின் கட்டளையை ஏற்க மறுத்த மனமே இபுலீசாக உள்ளது. குருவின் வாய்மைக்குள் ஆவது ஒன்றே நித்திய பேரின்ப வாழ்வு.

*ஜீவசகோதரர் பழனிவேல்:* குருவின் விஸ்வரூபத்தை கண்டு மனம் அலைவற்று இருப்பதே இமையா நாட்டம். மெய்ப்பொருள் விடிந்த நாளே அவரவருக்கும் பிறந்த நாள். அசைவற்ற பரம்பொருளே கன்சுல் எனும் கூரிய வஸ்த்தான நாதமாக உள்ளது. கண்ட சூக்குமம் தாண்டி காஷாயம் அணிவதற்கு அருகதை உள்ளவர்களே மெய்உணர்வு பெற்று இறைநிலை அடைவர்.

**குருபிரான் அருளமுதம்:** அர்த்தம் கற்பிக்க முடியாத ஜீவனே, பூ போன்ற சுடாத தீயாக புகையாத கனலாக உள்ளது. தன்மயமாக்கும் அதன் தன்மையை குருவின் தயவால் அனுபவத்தால் தான் அறிய முடியும்.

**குரு முறாதி:** பொறிகள் ஓடாத இடமே போன நாள் மீண்டு பேரின்ப வடிவம் பெறும் இடமாகும். குருவின் செயலுக்கு எல்லாம் ஒத்துப் பழகி வாழ்ந்து காட்டும் வழி சொல்வதே குரு முறாதி. பிறவிக்கோள் மாற்றும் மதியாகிய ஆசானின் தயவால்தான் விதியை மாற்றும் அழியா நிதியைப் பெற்று பிறவிக்கடல் கடக்க முடியும். தலைக்கு மேல் கால் கண்ட தலையாகிய ஞானாசரியர் அருளும் எமன் அணுகா எல்லையே தஞ்சை மாநகர். காப்பான மும்மூலம் கண்டு கண்டம் கடந்து, ஓர்வகை மூவகை ஐவகை எண்வகை பொறுப்புமாக உள்ள ஓர் பொருளை உள்ளத்தில் உரிமையுற அறியும் போதே அமானிதத்தை அறிய முடியும்.

கோடி மனுவுக்கு ஈந்தாலும் குறையாத சிமிழியின் மையே தாத்து சிபத்தாக உள்ளது. விண்ணான விருட்சம் வித்தே அருளமுதமாக உள்ளது. காப்பாக விளங்கும் குருமுறாதி கண்டம் எனும் பதினாறு நிலைகளாக உள்ளது. மானுடர் ஆக்கையின் காப்பே ஆதியே துணை. விண்ணிடிந்து விழுவதே ஜீவன் கலங்கும் நிலையாக உள்ளது. ஆப்பான தனிகையர் சுதன் சொல்வாக்கே அமுதமான அருண்ஞானக் குருமுறாதி என குருபிரான் அருளியதும் ஸ்தோத்திரப் பாடலுடன் அவை நிறைவுற்றது.

*பிரம்மா முதல் ஸ்தம்ப பரியந்நமான ஸ்தாவர ஜங்கமும் பரமாத்ம சொரூபமாம். ஆதலால் ஜகன்மயமான குருவை னமஸ்கரிக்கின்றேன்.*

***~ குரு கீதை***



Copyright © AMNA Trust, Chennai

## 31-03-2024 ~ ஞாயிற்றுக்கிழமை ~ சத்துவாச்சாரி அவை
## தொகுப்பு: ஸ்ரீமதி. ஹேமலதா தியாகராஜன்

சாலை ஆண்டவர்கள் அருளிய **மாயக் கூத்தின் வகையறியாமல் யான்...** என்ற ஸ்தோத்திரப் பாடலுடன் அவை மலர்ந்தது.

**குருபிரான் அருளமுதம்:**

ஐயறிவு வரை உள்ள ஜீவபேதங்களும், ஆறறிவு மனிதன் போன்றே பகுத்து அறிவதால் ஆறாவது அறிவு பகுத்தறிவு என எண்ணுவது அறியாமையே. பொய் மெய்யும், நன்மை தீமையும் பிரித்தறிந்து தன்னை அறியும் அறிவே ஆறாவது அறிவு. மனிதனின் ஆறாவது அறிவை அறிய வைத்து நித்தியத்தில் ஆக்கும் குருபிரானே நித்தியன். குருவருளால் தேவரகசியம் அறிந்து அதில் தேர்ந்தவர்களே தேவர்கள்.

*ஜீவசகோதரர் கௌதம்:* நாம் காண்கின்ற யாவும் மாயை எனும் மறலி என்பதை மெய் ஆசான் மூலமே அறிய முடியும். மறலி கை சிக்காமல் காக்கும் இடமே மெய்வழிச் சாலை என்பது சாலை ஆண்டவர்களின் திருவாக்கு. குருவின் தயவால் மூலமந்திரத்தை தரிசித்து ஓதுவதே பலன். குருவருளால் தன்னுலகாகிய சாலையை அறிந்து ஜென்ம சாபல்யம் அடைவதே னின்றதொரு பிரளயம். பேயாக அலையும் நம் மனதின் பிடியிலிருந்து அறிவை மீட்டு, தூய ஞானச்சுடர் விளக்காக ஜொலிக்கச் செய்யும் ஆசானின் ஓசை கொண்ட நடனமே, நம்மை ஓரறிவாக்கி சிவமாக்கும் என்ற பகிர்தலுடனும் ஸ்தோத்திரப் பாடலுடனும் அவை இனிதே நிறைவுற்றது.

## 31-03-2024 ~ ஞாயிற்றுக்கிழமை ~ சிவகாசி அவை
## தொகுப்பு: ஸ்ரீமதி. விஜயசித்ரா

பரிசுத்த ஆவித் தெய்வம் பிரம்மோதய மெய்வழிச் சாலை ஆண்டவர்களின் பொற்பாதங்களை வணங்கி அவை இனிதே மலர்ந்தது.

*ஜீவசகோதரர் ராஜமகேஷ்:* ஆக்கவும் அழிக்கவும் இயலா நீக்கமற நிறைந்த அணு சக்தியின் பயனை மானிட ஜென்மம் அழிவை நோக்கியே செலுத்துகிறது. அழியாத அதனை வள்ளல்பிரான் சிற்றணு வடிவாகிய ஆன்மா என்றும், அணுவில் அணுவாகிய ஆதிப்பிரான் என திருமூலரும், கோடி சூர்யப்பிரகாச இதய மேருகிரி அரசு தவசுமால் என சாலை ஆண்டவர்களும் அருளியுள்ளார்கள். அழிவற்ற அறிவாகவும் அழிகின்ற மனமாகவும் உள்ள வஸ்து அதனை குருவருளால் தான் அறிய முடியும்.

*ஜீவசகோதரர் பழனிக்குமார்:* எண்டிசைக்கும் முன் நிற்கும் பஞ்சாட்சரமே அறிவாகவும் மனமாகவும் சிவசக்தி வடிவாகவும் உள்ளது. மதயானை போல் திரியும் மனதை, பகவான் சக்ராயுதம் கொண்டு கஜேந்திரனைக் காத்தது போல், ஆசான் தன் வாளாயுதத்தால் நம் வஞ்சப்புலன் சதியை வெட்டி வீழ்த்தி அற வழியில் செலுத்துகிறார்கள்.

*ஜீவசகோதரர் கிரகதுரை:* உலகில் மனம் கொண்டு அனுபவிக்கின்ற சகல இன்பங்களும் சலிப்பை தருகின்ற சிற்றின்பமே. மெய் குருவானவர்கள் தங்கள் இரக்கத்தால் நம் மனத்தை அறிவு வடிவாக மாற்றி சலிக்காத பேரின்பத்தை அனுபவிக்க வைக்கிறார்கள்.

*ஜீவசகோதரர் ராஜேஷ்:* சரியை எனும் ஒழுக்க நெறியும் உழவாரப் பணியும் இன்னதென சொல்லேர் உழவராக வரும் ஒரு குருவின் தயவால்தான் அறிய முடியும். பண்படாத நம் மனமாகிய நிலத்தை தன் சொல்லாகிய உழவுகோல் கொண்டு பண்படுத்தி வித்தில்லா வித்து விதைத்து தளிர், இலை, பூ, காய், பழமாக மிளிரச் செய்யும் குருவின் பணியே உழவாரப் பணி. அவர்களே கிரியை, யோகம், ஞானம் என்ற ஒழுக்க நெறிகளைக் கற்பிக்கும் நெறியாளர்.



Copyright © AMNA Trust, Chennai 

*ஜீவசகோதரி மல்லிகா (பவானி):* ஜீவன் வீணாகாமல் காக்கும் குருவின் கருணையே ஜீவகாருண்யம் அன்றி மக்களின் பசிப்பிணி தீர்ப்பதல்ல. நகல் வடிவான கோவில் சிற்பங்களை அசல் என எண்ணும் அறியாமை அகற்றி, அசலான அசலை அகமியத்தில் அறிய வைத்த குருவிற்கு கோடி நமஸ்காரம்.

*ஜீவசகோதரி பிரபா:* அவரவரின் அகமியத்தில் அறிவாக விளங்கும் சிவனே, ஆசை கொண்டு புறத்தில் மனமாக செல்லும் விதியாகிய எமனாக இருப்பதை, குருபிரான் தன் மதி எழுத்தால் மீண்டும் சிவனாக மாற்றி வீடுபேறு அடையச் செய்கிறார்கள்.

*ஜீவசகோதரி கவிதா (திருத்தணி) :* யாவரிடமும் உள்ள பொதுப் புலமையாகிய சந்தேகம் தீர்த்து, தேகத்துள் அறிவுப் பிரகாச விளக்கேற்றி வைக்கும் ஆசானே வாடாத தீபம். சாலை ஆண்டவர்கள் அருளியுள்ள செயலுள்ள வாசகங்கள் அனைத்தும் என்னுள் செயலாக்கி உணர வைத்த அருட்குருவே இன்று ஆதி மார்க்க னீதி அவையின் அங்கமாக என்னையும் ஆக்கியுள்ளார்கள்.

*ஜீவசகோதரி மாலதி:* அறம் சார்ந்த வாழ்வே இல்லறத்தின் சிறப்பு. மனமாகிய பெண் அறிவாகிய ஆணுடன் சேரும் தருணமே திருமணம். குருபிரான் அருளிய மெய்வணக்கமே தன்னை அறியும் தகும் அறிவைப் பெற்று, இறப்பு ஒழிக்கும் சன்மார்க்கத்தை அடைவதற்கான வழி. அனித்தியம் மாற்றி அழியா நிதியாகிய நித்தியம் அருளும் ஞான சைதன்ய அரசே குருபிரான்.

*ஜீவசகோதரி கோமதி:* நம் மெய்உணர்வை மேம்பெறச் செய்யும் குருவின் இச்சைக்கு இசைவதே இசை. கவனம், மனனம், கீர்த்தனம் – இம் மூன்றும் இசையின் அடிநாதம். வைராக்கிய சித்தம், கவனம், விடாமுயற்சியுடன் கற்க வேண்டிய இசை போல் குருபிரான் அருளிய மெய்ஞ்ஞான நிலைகளில் கடின மனம் வைராக்கியமுடன் பழகிவர கதி சாதனை கைவரவாகும்.

*ஜீவசகோதரி பவானி:* குருபிரான் முன்னிலையில் பழக வேண்டிய பையத்தே சாலை ஆண்டவர்கள் அருளியுள்ள **மக்காமன் மஹ்மூதா, மும்கினுல் உஜூது**, **மும்தன அல் உஜூது**, **சலாமத்து என்னும் சாந்தி னிலை பொருந்தும் ரூஹே சிர்றி** எனும் நான்கு படிநிலைகள். இராஜாங்க யோகத்தின் மூலமாக மனதை அறிவாக மாற்றி, சாமுன் சாகப்பழகும் உளவறிவித்து நம் வினை தீர்க்கும் விநாயகப் பெருமானே குருபிரான்.

**குருபிரான் அருளமுதம்:**

**இன்ன ணம்பல காரிய காரணம்**
**அன்னெ முத்துஅ றைந்நஅ தன்படிக்**
**கண்ணுங் ஙாதுனேர் பெற்றம னுக்கெலாம்**
**பண்ணு லாப்பதம் பற்றிப்ப டர்ந்நதே** **(காலந் நாட்டிய காரணப் பா)**

என அருளியுள்ள பரிசுத்த ஆவி தெய்வத்தின் திருவருளால் அருளமுதத்தை உண்டு பெருகிய குருகுலமாக **இழைக்கெழைக்க ஒளிவிரிக்கும் கசிதம் போலே** ஆதி மார்க்க னீதி அவையின் அங்கங்கள் திகழ்கின்றனர். **ஈதல் இசைபட வாழ்தல் அதுவல்லது ஊதியம் இல்லை உயிர்க்கு** என்ற வள்ளுவரின் வாக்கு போல் உலகாகிய குருபிரானுடன் இசைந்து ஒட்ட ஒழுகுவதே உயிரினும் மேலான ஒழுக்கமுடன் வாழ வழி வகுக்கும், என்ற குருபிரானின் அருளமுதுடனும் ஸ்தோத்திரப் பாடலுடனும் அவை நிறைவுற்றது.



Copyright © AMNA Trust, Chennai

## இசை வகுப்புகள்
## தொகுப்பு: ஸ்ரீமதி. லாவண்யா வாசுதேவன்

### 10-03-2024 ~ ஞாயிற்றுக்கிழமை

சாலை ஆண்டவர்கள் அருளிய **வந்த வேதம் வரைந்ந பயத்தினால்...** என்ற ஸ்தோத்திரப் பாடலுடன் அவை மலர்ந்தது. தொடர்ந்து, சாலை ஆண்டவர்கள் அருளிய நான்கு வரி பாடல்கள் **தகிட தகிட** எனும் ஜதியுடனும் ராக தாளத்துடனும் பாடுவதற்கான பயிற்சி அளிக்கப் பெற்று அவை இனிதே நிறைவுற்றது.

### 17-03-2024 ~ ஞாயிற்றுக்கிழமை

சாலை ஆண்டவர்கள் அருளிய **தாகமும் தணியான் தன்னுயி ரறியா**... என்ற ஞான முறையீடு ஸ்தோத்திரப் பாடலுடன் அவை மலர்ந்தது. தொடர்ந்து, சாலை ஆண்டவர்கள் அருளிய நான்கு வரி பாடல்களும், ஆனந்தக் களிப்பு பாடல்களும் ஜதியுடனும், தாளத்துடனும் பாடுவதற்கான பயிற்சி அளிக்கப் பெற்று அவை இனிதே நிறைவுற்றது.

### 24-03-2024 ~ ஞாயிற்றுக்கிழமை

சாலை ஆண்டவர்கள் அருளிய ஐம்மணிப் பொதிகை காப்பு செய்யுளான **பரவிரதாச் சாரி என்றுமே சமயாச்சாரி...** என்ற பாடலுடன் அவை மலர்ந்தது. தொடர்ந்து சாலை ஆண்டவர்கள் அருளிய நான்கு வரி பாடல்கள் ராக தாளத்துடன் பாடுவதற்கான பயிற்சி அளிக்கப் பெற்று அவை இனிதே நிறைவுற்றது.

### 31-03-2024 ~ ஞாயிற்றுக்கிழமை

சாலை ஆண்டவர்கள் அருளிய குரு முறாதி காப்பு செய்யுளான **திருவெ னுமிமை யானாடு டையவர்...** என்ற பாடலுடன் அவை மலர்ந்தது. தொடர்ந்து **அடிமுடினடுவும் அந்தமுமிலவாய்...** என்ற ஞான அகவல் பாடல் ராகத்துடன் பாடுவதற்கான பயிற்சி அளிக்கப் பெற்று அவை இனிதே நிறைவுற்றது.

## குரு வா ஆழ்க! குருவே துணை!

*சச்சிதானந்நமும், பாவாதீதமும், னித்தியமும், பூர்ணமும், னிராகாரமும், னிர்க்குணமுமாய் னின்று ஆத்மனிலையில் விளங்கும் ஜகத்குருவை னமஸ்கரிக்கின்றேன்.*

***~ குரு கீதை***



Copyright © AMNA Trust, Chennai 

## ஆதி மார்க்க னீதி அவையின் 2024 – மார்ச் மாதம் னிகழ்வுகள்

**03-03-2024 ஞாயிற்றுக்கிழமை மெய்வழி குழந்தைசாமி ஐயா அவர்களின் ஆண்டு பூர்த்தி விழா குருபிரான் சாலை ரவி அப்பா முன்னிலையில் ஆதி மார்க்க னீதி அவை அலுவலகம் னாயகன் இல்லத்தில் நடைபெற்றது.**




**26-03-2024 செவ்வாய்க்கிழமை, நமது குருபிரான் சாலை ரவி அப்பா சிவகாசி விஜயம் செய்து ஞான தேட்டம் உள்ள மக்களை சந்தித்து அருளமுத வர்ஷிப்பு வழங்கினார்கள்.**





Copyright © AMNA Trust, Chennai

## ஆதி மார்க்க னீதி அவையின் வருங்கால நிகழ்வுகள்

| நாள்/ இடம் | னிகழ்வுகள் |
|---|---|
| **01-05-2024 / தூத்துக்குடி** | குருபிரான் சாலை ரவி அப்பா அவர்கள் தூத்துக்குடி விஜயம் |
| **12-05-2024 / சிவகாசி** | குருபிரான் திருமுன்பாக மெய்வழி சாவித்திரி அனந்தகி அவர்களின் ஐந்தாம் ஆண்டு பூர்த்தி விழா. |



Copyright © AMNA Trust, Chennai

**குருபிரான் தங்களின் திரு நோக்கினின்றும் நோக்கிய பிரகாரம் ஆதி மார்க்க னீதி அவையின், 2024 மார்ச் மாதம் குருபாதம் போற்றி நல்லுணர்வுடன் நல்லுள்ளம் கொண்டு நன்கொடை வழங்கிய நன்மக்களின் எண்ணிக்கை - 49**

**அனைவருக்கும் நன்றி !!!**

**AMNA அறக்கட்டளைக்கு நன்கொடை வழங்கு ஆர்வம் உள்ளவர்கள், கீழ்கண்ட வங்கிக் கணக்கில் அனுப்புமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.**

**Account Name: Aathi Margha Neethi Avai**
**Account Number: 50200047470073**
**IFSC: HDFC0000323**
**Branch: Mylapore**



Copyright © AMNA Trust, Chennai

All Rights Reserved

***Published by:***
***AMNA TRUST (Registration No. 163/2019)***
***13/2, Hyder Garden 2nd Street, Otteri ,***
***Chennai – 600012***

***[www.amnatrust.org](http://www.amnatrust.org)***

**Contact Us**:

*Email: [write2amnatrust@gmail.com](mailto:write2amnatrust@gmail.com)*

*YouTube Channel: [https://youtube.com/c/amnatrust/](https://youtube.com/c/amnatrust/)*

*Facebook Page: [https://www.facebook.com/amnatrust/](https://www.facebook.com/amnatrust/)*

***பின்குறிப்பு****: இம்மின்னணுச்சஞ்ஞிகையில் தவிர்க்க இயலாது வரும் சில தட்டச்சுப் பிழைகளை அங்கத்தினர்கள் பொறுத்து அதனைத் தங்கள் பிரதிகளில் திருத்தி படித்துக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம். பிழைகளைத் தவிர்ப்பதற்கான முயற்சியை வெளியீட்டு குழு தொடர்ந்து மேற்கொள்ளும்.*

***The Editorial Team:***

*Shri. Sankar, Sivakasi*
*Shri. Venkatesa Muthu, Chennai*
*Shri. Vadivelan, Chennai*
*Shri. Manimaran, Chennai*
*Shri. Thiyagarajan, Chennai*
*Shri. Chiranjeevi, Chennai*

*Issue 33 – Month: April 2024*